
படிப்போம்; புத்தக வானில் பறப்போம்!

# தாய்மொழி வாசிப்புக்குரிய பெற்றோர் வழிகாட்டி

## தொடக்கநிலை 1 & 2

1. 'படிப்போம்; புத்தக வானில் பறப்போம்' (அறிமுகம்)
2. பெற்றோருக்குரிய குறிப்புகள்
3. தாய்மொழிகளில் வாசிப்பு வளங்கள் குறித்த தகவல்கள்





# படிப்போம்; புத்தக வானில் பறப்போம்!

ஆர்வத்தைத் தூண்டி, மனங்களைத் திறந்து, பண்பாட்டு வேர்களைப் போற்றி, இருமொழி வாசகராகத் தாய்மொழிகளில் வாசிப்பதை நேசிக்கும்வகையில் மாணவர்களை உயர்த்துதல்

'படிப்போம்; புத்தக வானில் பறப்போம்!' என்னும் முறைப்படுத்தப்பட்ட வாசிப்புத் திட்டம் தாய்மொழிகளில் வாசிக்கும் நாட்டத்தை மாணவர்களிடம் வளர்க்க முற்படுகிறது.

வாசிப்புக்கும் வாசிப்புத் தொடர்பான நடவடிக்கைகளுக்கும் தாய்மொழிப் பாடத்தின்போது வாரத்திற்கு ஒருமுறை 30 நிமிட நேரம் ஒதுக்கப்படும். தாய்மொழிக்குரிய இந்த வாசிப்புத் திட்டத்தின்போது நடத்தப்படும் சில நடவடிக்கைகள்:




## தனிநபர்




- வாய்க்குள் படித்தல்
- சுய எண்ணப் பிரதிபலிப்பு





## சகமாணவர்/குழுநிலை

- இணையாகப் படித்தல்
- புத்தகப் பகிர்வும் கலந்துரையாடலும்

## வகுப்பு

- ஆசிரியர் வழிநடத்தும் நடவடிக்கைகள்
- ஆசிரியர்/மாணவர் கதை சொல்லுதல்
- பாத்திரமேற்று நடித்தல்







- பள்ளி நூலகத்துக்குச் செல்லுதல்
- புத்தகம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுதல்
- வேறுபட்ட பனுவல்வகைகளைக் கண்டறிதல்
- புத்தகங்களையும் அவை குறித்த விவரங்களையும் தேடுதல்
- ஆய்வுப் பணிகளில் ஈடுபடுதல்

## பள்ளி



- பெரிய புத்தக வாசிப்பும் கதை சொல்லுதலும்
- காட்சிப்படுத்துதல்
- புத்தகப் பேச்சு



## குடும்பம்

- பெற்றோருடன் படித்தல்
- பொது நூலகத்துக்குச் செல்லுதல்





## ❋ பெற்றோருக்குரிய குறிப்புகள் ❋

**தங்கள் பிள்ளையின் தாய்மொழி வாசிப்புப் பழக்கத்தையும் திறன்களையும் வளர்ப்பதில் பெற்றோரின் பங்கு.**

உங்கள் பிள்ளை வாசிப்புப் பழக்கத்தையும் வாசிப்புத் திறன்களையும் வளர்த்துக்கொள்வதில் ஒரு பெற்றோராக உங்களுக்கு முக்கியப் பங்குண்டு.

உங்கள் பிள்ளை தானே விரும்பி வாசிக்கும் மனப்போக்குக் கொண்டவராகத் தாய்மொழியில் நூல்களை வாசிக்க ஆர்வம் காட்டும்போது நீங்கள் அதை ஆதரித்துப் பாராட்டுங்கள். அப்போது, உங்கள் பிள்ளை அதிக ஊக்கங்கொள்வார்.

நீங்கள் ஓர் ஊக்குவிப்பாளராக, முன்மாதிரியாக, வழிநடத்துநராகப் பங்களிப்பதன்மூலம் உங்கள் பிள்ளை வாசிப்பதற்கு ஏதுவான சூழலை வழங்க இயலும்.

### 1. ஊக்குவிப்பாளர்

- உங்கள் பிள்ளை தாய்மொழிப் புத்தகங்களைப் படிப்பதில் சிரமத்தை எதிர்கொள்ளும்போது, நீங்கள் அவரை விடாமுயற்சியுடன் செயற்பட ஊக்குவிப்பதோடு சிரமங்களைச் சமாளிப்பதற்கும் உதவலாம். உங்கள் பிள்ளை தாய்மொழியில் விரும்பிப் படித்து இன்புற உதவுங்கள்.



## 2. முன்மாதிரி



- நீங்கள் தாய்மொழியில் வாசிப்பவராக இருந்தால் அது உங்கள் பிள்ளை உங்களைப் பார்த்து ஊக்கம் பெற உதவும்.
- பெற்றோர்-பிள்ளை உறவை வளர்ப்பதற்குத் தாய்மொழிப் புத்தகங்களை உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து படித்து, அதைப்பற்றி உரையாடி, எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ளுங்கள்.

## 3. வழிநடத்துநர்

- உங்கள் பிள்ளைக்கு வாசிப்பில் ஆதரவளிக்கப் பரந்த அளவிலான வளங்களைப் பயன்படுத்துங்கள்.
- உங்கள் பிள்ளையை வாசிப்புத் தொடர்பான சமூக நிகழ்ச்சிகளில் பங்கேற்க ஊக்கப்படுத்துங்கள். இதன் வாயிலாக, உங்கள் பிள்ளையால் பாடத்திட்டத்துக்கு அப்பால் பரந்துபட்ட வாசிப்பு வளங்களைக் கண்டறிந்து தெரிவுசெய்ய இயலும்.





# ❋ என் பிள்ளையின் வாசிப்புத் திறனை மேம்படுத்த நான் எவ்வாறு உதவலாம்? ❋

**1**

## கற்றலுக்கு ஏதுவான சூழலை உருவாக்குதல்

வீட்டில் நூலகம் ஒன்றை அமைக்கவும். உங்கள் பிள்ளை புத்தகங்களை எளிதில் எடுத்துப் படிக்க வசதியாக இருக்கும்போது அவர்கள் வாசிப்பதற்கான உந்துதலைப் பெறுவர்.

**2**

## நல்ல வாசிப்புப் பழக்கங்களை வளர்த்தல்

வாசிப்பு நேரத்தை வழக்கமாக்கிக்கொண்டு உங்கள் பிள்ளையுடன் கதைப் புத்தகங்கள் அல்லது மின்புத்தகங்களைப் படியுங்கள். உங்கள் பிள்ளையை வாரத்திற்கு ஒரு முறையாவது நூலகம் அல்லது புத்தகக் கடைக்கு அழைத்துச் செல்லுங்கள்.

**3**

## வாசிப்பு வளங்களைப் பொருத்தமுறத் தேர்ந்தெடுத்தல்

உங்கள் பிள்ளையின் நாட்டத்துக்கும் வயதுக்கும் ஏற்புடைய புத்தகங்களைத் தேர்ந்தெடுங்கள். படப் புத்தகங்கள், எளிய பாடல் புத்தகங்களுடன் நீங்கள் வாசிப்பைத் தொடங்கலாம்.

**4**

## பிள்ளைக்குப் பார்வையாளராக இருத்தல்

உங்களுக்கு மொழி தெரியாவிட்டாலுங்கூட, உங்கள் பிள்ளை கதையை வாசிக்க ஊக்கப்படுத்துங்கள். பள்ளியில் படித்ததையும் செய்ததையும் உங்களுடன் பகிர்ந்துகொள்ளச் சொல்லுங்கள்.

**5**

## உங்கள் பிள்ளையின் வாசிப்புச் செயல்முறைக்கு முழு ஆதரவளிக்கத் தயாராய் இருத்தல்

ஒரு குறிப்பிட்ட சொல்லுக்கு இணையான தாய்மொழிச் சொல்லைக் கண்டறிவதற்கு, இருமொழி அகராதி, மின்னகராதி அல்லது கைப்பேசிச் செயலிகள் முதலியவை கைகொடுக்கும்.

# என் பிள்ளையின் வாசிப்புத் திறனை மேம்படுத்த நான் எவ்வாறு உதவலாம்?

## 6 வாசிப்பை அர்த்தமுள்ள, மகிழ்ச்சிகரமான செயல்முறையாக்குதல்

கதையிலுள்ள படங்களைப்பற்றிப் பேசுங்கள்; பிள்ளை தனது வேகத்திற்கேற்பப் பக்கங்களைப் புரட்டவும், பாத்திரமேற்று நடிக்கவும், தனது எண்ணங்களைப் பேச்சின்மூலம் வெளிப்படுத்தவும் வாய்ப்பளியுங்கள்.

## 7 வாசித்தல் தொடர்பான பணிகளை நிறைவுசெய்தல்

உங்கள் பிள்ளையின் ‘படித்தல் கடவுச்சீட்டில்’ கொடுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற ஊக்கப்படுத்துங்கள். எடுத்துக்காட்டாகப் பள்ளி நூலகத்துக்கும் பொது நூலகங்களுக்கும் சென்று புத்தகங்களை இரவல்பெறும் பணியைச் செய்துமுடித்தால் ‘பணிநிறைவுச் சான்றிதழ்’ வழங்கப்படும்.

## 8 பிள்ளையுடன் சேர்ந்து சொற்றொகுப்புப் பட்டியல் உருவாக்குதல்

கற்றுக்கொண்ட சொற்களின் பட்டியலைத் தொகுக்க உங்கள் பிள்ளைக்கு உதவுங்கள். அந்தப் பட்டியல் நீண்டுகொண்டு போவதைப் பார்க்கும் உங்கள் பிள்ளை அளவற்ற மனநிறைவுகொள்வார்.

## 9 வெளிப்புற உதவியை நாடுதல்

கதைகள், குழந்தைப் பாடல்களின் ஒலிப்பதிவு, ஒலிப்புத்தகம், இருவழித்தொடர்புச் செயலிகள் முதலியவை தொழில்நுட்பம்மூலம் கிடைப்பதால் நீங்கள் உங்கள் பிள்ளையின் வாசிப்புச் செயல்முறைக்கு ஆதரவளிக்க அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.







# தமிழ்மொழி வாசிப்புக்குரிய வளங்கள்

### E-books Recommendations: (National Library Board)

National Library Board - Ebooks

http://go.gov.sg/children-ebooks

### TLLPC Resources Kani Mani Reading App

Kani Mani App

https://go.gov.sg/tllpc-kanimaniapp

### TLLPC Resources E-book

E-book Reeno

https://go.gov.sg/tllpc-ebook-reeno

### TLLPC Resources E-book

E-book Muraliyin Bommaigal

https://go.gov.sg/tllpc-ebook-muraliyinbommaigal